**பிறப்பட்டி டெவலப்மென்ற் பிஎல்சீயினதும் அதன் துணைக்கம்பனியினதும் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

பிறப்பட்டி டெவலப்மென்ற் பிஎல்சீயினதும் ("கம்பனி") கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் ("தொகுதி") 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகிறது. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் துறையிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

கம்பனியினதும் தொகுதியினதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.1.1 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தெகுதியானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத்திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தொகுதியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்;

- பொருத்தமான எழுத்து மூலமான சட்டம், அல்லது தொகுதியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புக்களுடன் தொகுதி இணங்கியொழுகியிருந்ததா என்பதும்;

- தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்; மற்றும்

- தொகுதியின் வளங்கள் காலவரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள்

### 1.4.1 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு விடயம் | முகாமையினுடைய கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2001 இல் இலங்கை வியாபார வங்கியுடன்(Merchant Bank of Sri Lanka) கொண்டிருந்த பங்கு போட்போலியோ (portfolio) நீக்கப்பட்டதன் பின்னர் கம்பனியானது பின்வரும் கம்பனிகளிலிருந்து உபகாரப்பங்குகளினை பெற்றிருந்தது. இந்த பங்குகள் 2019 திசெம்பர் 31 இல் அதனுடைய முகப்பெறுமதியினை கருத்தில் கொள்ளாது அதனுடைய ஆரம்ப விலையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. | தொடர்ந்து வெளியிடப்படும் நிதிக்கூற்றுக்களில் குறித்த பங்குகளினை முகப்பெறுமதியிடுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த மற்றும் அதற்குப்பின்னரான காலாண்டுக்கான இடைக்கால நிதிக்கூற்றுக்கள்.<br><br>2019 திசெம்பர் 31 இல் குறித்த பங்குகளின் முகப்பெறுமதி ரூபா 55,359 ஆகும். | அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறான உபகாரப்பங்குகள் முகப்பெறுமதியில் பதிவு செய்யப்பட வேண்டும். |

| கம்பனி | பங்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஆசிறி கொஸ்பிற்றல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி | 30 |
| சிலிங்கோ இன்சூரன்ஸ் பிஎல்சி | 26 |
| ஹற்றன் நஷனல் பாங் பிஎல்சி | 18 |

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம் | ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ஆகியவற்றை கணிப்பிடும்போது கம்பனியானது அடிப்படைச் சம்பளத்துடன் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் நிலையான படிகளினை உள்ளடக்குவதில்லை. | இது தொடர்பாக முகாமையானது கணக்காய்வு குழுவிற்கும் பணிப்பாளர் சபைக்கும் பத்திரம் சமர்ப்பிக்கும். | ஊழியர் சேமலாப நிதி(EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி(ETF) ஆகியவற்றை கணிப்பிடும்போது, அடிப்படைச் சம்பளத்துடன் பொருத்தமான அனைத்து படிகளையும் உள்ளடக்குவதற்கு பரிந்துரை செய்யப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் (சிஎஸ்ஈ) சிஎஸ்ஈ(CSE) பட்டியல் விதி 7.13.1(அ) | பொதுமக்கள் வைத்திருக்க வேண்டிய குறைந்தபட்ச 20 சதவீத தேவைப்பாட்டுடன் கம்பனி இணங்க முடியாதிருந்தது. | கம்பனியை பட்டியலிலிருந்து நீக்குவதற்கும் சிறுபான்மை பங்குதாரர்களினால் வைத்திருக்கப்படும் பங்குகளினை மீள்கொள்வனவு செய்வதற்கும் சட்டரீதியான சாத்தியத்தன்மையினை கம்பனி மதிப்பீடு செய்து கொண்டிருக்கின்றது. | பட்டியலிலிருந்து நீங்கும் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்படுகின்றது. |

**1.6 வரி ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை.**

| | கணக்காய்வு விடயம் | முகாமையினுடைய கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 12,617,139 பெறுமதியான மேலதிகம் ஒன்று முதலீட்டு ஆதனத்தினுடைய குளப்பகுதிக்கு கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நடைமுறை ஆண்டு வருமான வரி கணிப்பீட்டில் மேற்படி தொகைக்கு மூலதன கொடுப்பனவை கம்பனி கோரியிருக்கவில்லை. | 2019/2020 மதிப்பீட்டாண்டிற்கான இறுதி வரி மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் கட்டிடத்தின் குளப்பகுதி மீதான மூலதன கொடுப்பனவானது ஏற்கனவே கோரப்பட்டிருந்தது. | நிதியாண்டிற்காக கணிப்பிடப்பட்ட வருமான வரி பொறுப்பின் சரியான தன்மையினை உறுதிப்படுத்தல். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான தொழிற்பாடுகளின் விளைவானது ரூபா 696,006,158 தொகையான இலாபத்தினை காட்டுவதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபமானது ரூபா 497,794,653 ஆகவும் உள்ளது. எனவே, நிதி விளைவுகளில் ரூபா 198,211,505 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின்போது வாடகை வருமானம் 13 சதவீதத்தினாலும் ஏனைய தொழிற்பாட்டு வருமானம் 98 சதவீதத்தினாலும் அதிகரித்தமையானது இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தது.

### 2.2 முக்கிய வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவு விடயங்களின் பகுப்பாய்வானது அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | முரண் தொகை அதிகரிப்பு / (குறைவு) | முரண் | முரணிற்கான காரணம் |
|---|---|---|---|
| ………… | …………….. | ………… | ……………..……………… |
| | (ரூபா.) | % | |
| வருமானம் | 95,759,573 | 13 | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது வாடகை வருமானமானது 13 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 138,634,556 | 98 | மூலதனச் செலவீனங்களினை திருப்பிச் செலுத்துவதற்காக இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 26 மில்லியனைப் பெற்றதும், துணைக்கம்பனியிடமிருந்து ரூபா 159.8 மில்லியன் பங்கிலாபத்தினை பெற்றதும். |
| நிதி வருமானம் | 15,641,491 | 8 | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நிலையான வைப்பிலான முதலீடு மற்றும் REPO முதலீடு என்பன முறையே 22 சதவீதம் மற்றும் 65 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் அதற்கு முன்னைய ஆண்டினதும் கம்பனியின் குறிப்பிடத்தக்க முக்கியமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்கீட்டு விகிதம் | 2019 | 2018 |
|---|---|---|
| ……………………… | …… | …… |
| தேறிய இலாப விகிதம் (%) | 51.98 | 49.28 |
| மொத்தச் சொத்துக்களின் மீதான திரும்பல் (%) | 20.18 | 17.26 |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் (%) | 18.62 | 14.94 |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 21:1 | 21:1 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியின் இருப்பானது 1 வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்ட உருப்படிகளையும் உள்ளடக்கியுள்ளது. சில பொருட்கள் 6 முதல் 9 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த இருப்புக்களானது, மாற்றப்படும் அல்லது அகற்றப்படும் வரை வைக்கப்பட்டிருக்கின்ற இயந்திர உதிரிப்பாகங்கள் என்று அடையாளம் காணப்பட்டது. | அத்தகைய உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்வதற்கு 8-12 வாரங்கள் ஆகக்கூடும் என்பதனால் இலங்கை வங்கி தொழிற்பாடுகளுக்கு தடையின்றி சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்காக பிரதான ஆதன மற்றும் உபகரணங்களுக்கான முக்கியமான உதிரிப்பாகங்களை சேமிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். சில முக்கியமான ஆதனம் மற்றும் உபகரணங்களின் உதிரிப்பாகங்களிற்கு, உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கான முன்னணி காலம் 4 மாதங்களுக்கு மேல் அதிகரிக்கக்கூடும். | இருப்புக்களின் அளவை அவ்வப்போது மதிப்பாய்வு செய்வதற்கும் மெதுவாக நகரும் மற்றும் வழக்கற்றுப்போன இருப்புக்களை அடையாளம் காண்பதற்கும் முறையான கொள்கையை கொண்டிருப்பதற்கு பரிந்துரை செய்யப்படுகிறது. |

### 3.2 விதிகள் மற்றும் வழிகாட்டல்களை பின்பற்றுவதில் தாமதம்

| | கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடல் விதிகள் 7.13.1 உடன் இணங்காததால், அதனுடைய பட்டியலிலிருந்து நீங்கும் செயன்முறையை கம்பனி 2014 மார்ச் 21 இல் தொடங்கியது. இது ஏற்கனவே ஆறு வருட காலத்தை கடந்து விட்டது என்பதுடன் நீக்குதல் செயன்முறை இன்னும் நடைபெற்று கொண்டிருக்கின்றது. | - நீக்குதல் செயன்முறை மார்ச் 2014 இல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், முக்கிய பங்குதாரரான இலங்கை வங்கி (பீஓசி) மேற்படி பட்டியலிடல் விதிக்கு இணங்குவது தொடர்பில் முடிவெடுப்பதற்கு காலம் எடுத்தது. பட்டியலிலிருந்து நீங்குவதற்காக பங்குதாரர்களின் அனுமதியை பெறுவதற்கு கம்பனி 2018 ஏப்பிரல் 04 அன்று அதிவிசேட பொதுக்கூட்டத்தை கூட்டியது எனினும் எஸ்ஈசி (SEC) இன் விதி 5 இன் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பட்டியலிலிருந்து நீங்குவதற்கு பங்குதாரர்களின் அனுமதியை பெறுவது வெற்றியளிக்கவில்லை. | நீக்குதல் செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு பரிந்துரை செய்யப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | | அனைத்து தெரிவுகளையும் மீள் மதிப்பீடு செய்த பின்னர், பிரதான பங்குதாரர் கம்பனியால் சொந்த பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலம் பட்டியலியிருந்து நீங்கும் செயன்முறையை மீண்டும் ஆரம்பிக்குமாறு கம்பனிக்கு அறிவுறுத்தியுள்ளார்.<br><br>சிறுபான்மை பங்குதாரர்கள் வைத்திருக்கும் பங்குகளை மீள் கொள்வனவு செய்வதற்கும் கம்பனியை பட்டியலிலிருந்து நீக்குவதற்கும் சட்டரீதியான சாத்தியத்தினை கம்பனி தற்பொழுது மதிப்பீடு செய்து வருகின்றது. | |
| (ii) | இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை பிரிவு அதனுடைய 2017 நவம்பர் 20 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், வங்கியின் முக்கிய வணிக நோக்கத்திற்கு புறம்பாக உள்ளதால் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் கொலடெனியா ஹைட்ரோபவர் (பிறைவேட்) லிமிட்டட் (பிறப்பட்டி டெவலப்மென்ற் பிஎல்சி இன் முழு உடமையான துணைக்கம்பனி) இல் பீஓசி குழுமத்தை வைத்திருப்பதை நீக்குவதற்கு அறிவுறுத்தியது. தேர்தல் மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் பரவல் நாட்டில் காணப்பட்டமையால் முகாமையினால் 2020 ஜுன் வரையில் இந்த செயன்முறையை தொடர முடியவில்லை.<br>இலங்கை மத்திய வங்கி அதனது 2020 ஜுலை 30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2021 ஜுன் 30 ஆம் திகதி அளவில் விலக்குதல் செயன்முறையை முடிப்பதற்கு கால இலக்கை நீடித்திருக்கின்றது. | - தலைவர், இலங்கை வங்கி தனது (பீஓசி) 2018 மார்ச் 08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், குறித்த முதலீடானது இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டதன்படி இலங்கை வங்கியினது முக்கிய வணிகத்திற்கு புறம்பாக உள்ளதால் கேஎச்பி (KHP) யில் உள்ள முதலீட்டினை 2020 நவம்பர் 20 ஆம் திகதிக்குள் அப்புறப்படுத்துமாறு கம்பனிக்கு அறிவித்தார்.<br>- இருப்பினும், தேர்தல்கள் மற்றும் நாட்டில் கொவிட் 19 தொற்றுநோய் பரவியதால், முகாமையினால் 2020 ஜுன் வரையில் இந்த செயன்முறையை தொடர முடியவில்லை.<br>- இலங்கை மத்திய வங்கி அதனது 30 ஜுலை 2020 ஆம் திகதிய கடிதம் மூலம் நீடித்த காலக்கெடுவான 30 ஜுன் 2021 அளவில் விலக்குதல் செயன்முறையை முடிப்பதற்கு பிஓசி ஆனது அதனது 2020 ஆகஸ்ட் 30 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் கம்பனிக்கு அறிவித்துள்ளது. | இலங்கை மத்திய வங்கியினால் வழிகாட்டப்பட்டதன்படி, கொலடெனியா ஹைட்ரோபவர் (பிறைவேட்) லிமிட்டட் இனை அகற்றும் செயன்முறையை விரைவுபடுத்த பரிந்துரை செய்யப்படுகிறது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

2019 திசெம்பர் 31 நிலவரப்படி, கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கும் உள்ளபடியான பதவியணியினரிற்கும் இடையில் பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன. 2020 ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களின் போது இரண்டு நிறைவேற்று மட்ட வெற்றிடங்களை கம்பனியால் நிரப்ப முடிந்திருந்தது.

**கணக்காய்வு விடயம்**

31 திசெம்பர் 2019 நிலவரப்படி கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கும் உள்ளபடியான பதவியணியினரிற்கும் இடையில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன என்பதுடன் கம்பனியானது தேவையான ஆட்சேர்ப்புக்களை செய்ய அவசியமான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.

| பிரிவு | ஆங்கீகரிக்கப்பட்ட ஆளணி | 31.12.2019 இல் உள்ளபடியான ஆளணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| நிறைவேற்று பதவியணியினர் | 15 | 11 | 04 |
| பராமரிப்பு பிரிவு | 61 | 57 | 04 |
| நிதிப் பிரிவு கணக்கீட்டு பிரிவு | 09 | 07 | 02 |
| மனிதவள மற்றும் நிர்வாக பிரிவு | 16 | 14 | 02 |

**முகாமையின் கருத்துரை**

தரப்பட்டுள்ள திகதிகளில் பின்வரும் வெற்றிடங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருந்தன.

(i) 2020 ஜனவரி 01 அன்று பொறியியல் உதவியாளர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார்.

(ii) 2020 மார்ச் 02 இல் பராமரிப்பு பொறியியலாளர் -மின்

வெற்றிடங்களை நிரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் கொவிட் 19 தொற்றுநோய் பரவல் அதிகரிப்பு மற்றும் தேர்தல் காரணமாக நிரப்ப முடியாதிருந்தது.

தேவைப்படும்போது வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

**பரிந்துரை**

காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.